உ

அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

பதிவு இல. J/3/84/23-09-1988

# 19ஆவது ஆண்டு நிறைவு
# பரிசளிப்பு விழா அறிக்கை

2001

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்
## தெல்லிப்பழை
## 2001

*நிர்வாக சபை :*

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. – **தலைவர்**
திரு. மு சபாநாதன், *நீதிபதி – உப-தலைவர்*
திரு. ந. செல்வநாயகம் – *உப-தலைவர்*
திருமதி ம. இராமநாதர் – *பொதுச் செயலாளர்*
திரு. அ. சண்முகநாதன் – *பொருளாளர்*
திரு. நா. தவநாதன் – *நிர்வாகச் செயலாளர்*
திரு. சு. ஏழூர்நாயகம் – *உப-பொருளாளர்*
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்
திரு. மு. அருளையா
திரு. ச. விநாயகரத்தினம்
திரு. ச. கந்தையா
திரு. சி. குமாரசாமி
திரு. நா. தவமணிநாயகம்
திரு. ஆறு. திருமுருகன்
திரு. சி. புஷ்பநாதன் – *(கொழும்புப் பிரதிநிதி)*
திரு சு. முருகையா
திரு. நா. சிவநாதன் – *(இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதி)*

உ

அம்பாள் துணை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

# 19ஆவது ஆண்டு நிறைவு

# பரிசளிப்பு விழா அறிக்கை

## 18 - 02 - 2001 ஞாயிற்றுக்கிழமை

*தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவியின் திருவருளை நெஞ்சிலே நிறுத்தி அனைவரையும் வணங்கி பரிசளிப்பு விழா அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.*

இன்றைய விழாவுக்குத் தலைமை தாங்குகின்ற எங்கள் வணக்கத்துக்குரிய கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J P. அவர்களே ;

வணக்கத்துக்குரிய சிவாச்சாரியப் பெருமக்களே,

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களே,

முதன்மை விருந்தினர் பேராசிரியர் திரு. செ. சிவஞானசுந்தரம் அவர்களே,

திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் அவர்களே,

அன்பான பெருமக்களே,

குழந்தைகளே, உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பத்தொன்பதாம் ஆண்டு விழாவில் நாம் கூடியிருக்கிறோம். இவ்விழாவுக்கு தலைமை தாங்கும் எங்கள் வணக்கத்துக்குரிய கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அறியாதவர்கள் எவரும் இருக்க மாட்டார்கள். அன்னாரின் அரவணைப்பிலே வாழ்ந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் எங்களுக்கு எந்தவிதமான குறையுமில்லை என்பதை பெரு*

மிதத்துடன் தெரிவிக்கின்றேன். 76 வயதை பூர்த்தி செய்திருக்கின்ற எங்கள் அன்னையை முதலில் வாழ்த்தி வணங்குகிறேன்.

அடுத்து இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் அவர்களை வாழ்த்தி வணங்கி வரவேற்கிறேன். நல்லார் இணக்கமும் இறைபூசை நேசமும் ஞானமும் அல்லாது வேறு ஒன்றும் அறியாத மகத்துவத்துக்கு உரியவர் இப்பெரியார். ஸ்ரீ சத்தியசாயி பாவாவின் பெருமைக்குரிய சீடராக விளங்குபவர் இவர். இன்று எங்கள் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து நல்லுரை வழங்கி எமது இல்லத்தை ஊக்குவிக்க இருப்பது எமக்குப் பெருமிதம் தரும் நிகழ்ச்சியாகும்.

எங்கள் பணிகளுக்கெல்லாம் ஆசியும் வாழ்த்தும் என்றென்றும் வழங்கிக் கொண்டிருப்பவர் நல்லை ஆதீனத்தின் இன்றைய முதல்வர் ஆவர். சுவாமிகள் எழுந்தருளி வருகை தருவதினால் எங்கள் நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் தெய்வீக அருள் கிடைக்கிறது.

எங்கள் மகளிர் இல்லப் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்க வருகை தந்திருக்கின்ற திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் அவர்களை நாம் இருகரம் கூப்பி வரவேற்கிறோம். மல்லாகம் கிராம சபைத் தலைவராகவும் பிரதேசச் சபைத் தலைவராகவும் அமர்ந்து அத்தியாவசியமான சமூகப்பணிகளை ஆற்றிவரும் அம்மையார் அவர்களை எங்கள் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்க ஒழுங்கு செய்திருப்பது மிகமிக மகிழ்ச்சியான நிகழ்வாகும். மேலும், பிறந்த மண்ணைப் பெருமைபடுத்திக் கொண்டிருக்கின்ற நலன் விரும்பிகள் பலர் இங்கே வருகை தந்திருக்கிறார்கள், அத்தனை பேருக்கும் எமது வணக்கமும் வரவேற்பும் உரித்தாகுக.

**மகளிர் இல்லத்தில் இடம்பெற்றோர் விபரம்:**

ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 12 வரை

| | | |
|---|---|---|
| கல்வி கற்போர் எண்ணிக்கை: | | 51 |
| பல்கலைக்கழகத்தால் வெளிவந்தோர் | ,, | 03 |
| திருமகள் அழுத்தகத்தில் பணிபுரிவோர் | ,, | 01 |
| மகளிர் இல்லப் பணியாளர் | ,, | 06 |
| 50 வயதுக்கு மேற்பட்ட அன்னையர் | ,, | 09 |
| ஆலய அலுவலகத்தில் பணிபுரிவோர் | ,, | 03 |
| நல்லூர் மணிமண்டபப் பணியாளர் | ,, | 04 |
| சிற்றூழியர் | ,, | 04 |
| கோசாலைப் பணியாளர் | ,, | 02 |
| | | 83 |

**கல்வி:**

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இரண்டாம் வகுப்பு தொடக்கம் க. பொ. த உயர்தர வகுப்பு வரை இல்லப் பிள்ளைகள் கல்வி கற்று வருகிறார்கள். பிரத்தியேக வாகன வசதி செய்து இவர்களுடைய போக்கு வரவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கல்லூரியில் மாணவர் தலைவர்களாக நான்கு பேர் பணியாற்றுகின்றார்கள். விளையாட்டுத்துறையிலும், இசைத்துறையிலும், நடனம், நடிப்புத்துறையிலும் எங்கள் இல்லப் பிள்ளைகள் இராமநாதன் கல்லூரியிலே முன்னனியில் நிற்பது குறிப்பிடத்தக்கது. இல்லத்திலே வந்து கல்வி கற்பிப்பதற்கு ஆங்கிலம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்குப் பிரத்தியேக ஆசிரியர்களை நியமித்துள்ளோம். கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் பிரத்தியேக கல்வி நிறுவனங்களிலே கற்பிக்கப்படுகின்றது.

**நிதி உதவி:**

மகளிர் இல்லப் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி, வைத்தியம் ஆகியவற்றுக்கு உள்நாட்டுப் பிர

முகர்களும், வெளிநாட்டு நிறுவனங்களும் தாராள சிந்தையோடு நிதி உதவி செய்து வருவது குறிப்பிடத் தக்கது.

நிறுவனங்களின் பெயர்களையும் ரூபா ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட அன்பளிப்புகளை உதவியோர்களுடைய பெயர் விபரங்களையும் கீழே தருகின்றோம்.

★ Dr. N. A. இரஞ்சிதன் U. S. A தமிழர் ஆதார நிறுவனம்

★ சிவயோகம் றூட்டிங் மகாமாரியம்மன் ஆலயம்

★ லண்டன் ஸ்கொட் நிறுவனம்

★ அவுஸ்ரேலியா சிட்னி அபயகரம் நிறுவனம்
திருமதி P. சிவானந்தம் அவர்கள்

★ Dr. P. சிவலிங்கம் அல்பேட்டா அமெரிக்கா

★ திரு. க. கந்தசாமி கொழும்பு பாலபொக்கன றோட்

★ திரு. S. செந்தில்நாதன் கனடா

★ திரு. க. இராசசூரியர் பகாமாஸ்

★ கன்பரா தமிழ்ச்சங்கம் அவுஸ்ரேலியா

★ சைவசித்தாந்த மன்றம் கனடா

★ லண்டன் கனக துர்க்கை அம்மன்

மேற்காட்டியவர்களோடு மேலும் பல நிறுவனங்களும் தாராள சிந்தை உடையோரும், அறக்கொடையாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து இல்லத்தின் வளர்ச்சிக்காக அன்பளிப்புக்களை வழங்கிக் கொண்டே இருக்கின்றனர். இந்த விபரங்கள் அனைத்தும் வருடாந்த வரவு செலவு அறிக்கையில் இடம்பெறும்.

திருமணங்கள், பிறந்ததினம், சிரார்த்ததினம் ஆகிய நாட்களில் இல்லப் பிள்ளைகளுக்கு உணவு வழங்க நிதி வழங்குவோர் பலர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியைச் சேர்ந்த செல்விகள் இராமலிங்கம் அவர்கள் இல்ல வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி

வருகிறார்கள். கொழும்பு பாமன்கடலேனைச் சேர்ந்த வைத்திய கலாநிதி செ. சிவலிங்கம் அவர்கள் மாதம் தோறும் ஒருதொகைப் பணத்தை அன்பளிப்புச்செய்து வருவது குறிப்பிடத்தக்கது. யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய கலாநிதி திருமதி கனகசபை அவர் களும் அன்பளிப்புச் செய்து இல்லப் பணிகளை ஊக்கு வித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நல்லூரில் அமைந்த**
**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் :**

நல்லைக் கந்தப் பெருமானின் உற்சவ காலங்களிலே இருபத்தைந்து தினங்களும் இம்மண்டபத்தில் அன்ன தானம் வழங்கப்படுகிறது. அத்துடன் விசேட உற்சவ காலங்களில் தண்ணீர்ப்பந்தல் பணியும் நடைபெறு கிறது. இவற்றுக்கெல்லாம் ஆதரவு தருகின்ற யாழ். குடாநாட்டு வர்த்தகப் பெருமக்களை மனமாரப் பாராட்டி நன்றி கூறுகிறோம். மேலும் அறநெறிப் பாடசாலை களின் பரிசளிப்பு விழாவும், கந்தசஷ்டி விழா, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை ஆகியனவும் இங்கு சிறப்பாக இடம்பெறுகிறது. கந்தசஷ்டி விழாக் காலத்தில் 28-10-2000 தொடக்கம் 02-11-2000 வரை "கலியுகமும் கந்தன் கருணையும்" என்ற பொருளில் சுழிபுரம் பிரசங்க பூசணம் திரு. ந. சிவசண்முகமூர்த்தி அவர்கள் பக்க வாத்திய சகிதம் கதாப்பிரசங்கம் நடாத்தியுள்ளார். 03-11-2000 வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு கந்தப்பெருமான் அடியார்கள் அனைவருக்கும் பாரணைப் போசனம் வழங்கப்பட்டது.

**நன்றி கூறுகிறோம் :**

இம் மகளிர் இல்லத்தின் பத்தொன்பதாவது ஆண்டு விழாவிலே பலருக்கு நன்றி கூற வேண்டிய கடமை எமக்குண்டு.

★ எங்கள் இல்லப் பணிகளுக்கு ஆதரவு வழங்கிவரும் தேவஸ்தான நிர்வாக சபையினர்

★ எமது பணியை நல்லபடி ஊக்குவித்து அன்பளிப்புக்களை நல்கிவரும் உள்ளூர் வெளியூர் அன்பர்கள்

★ மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு வைத்திய உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கும் வைத்திய கலாநிதி ம. மகேசன் அவர்கள் (உடுவில்) வைத்திய கலாநிதி க. ஈஸ்வரி (தெல்லிப்பழை)

★ மாதந்தோறும் தேவஸ்தான நிதியிலிருந்து ரூபா இருபதினாயிரம் மகளிர் இல்லத்திற்கு வழங்கப்படுகின்றது. ஆகவே துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்

★ இல்லக் கடமைகளிலும் மற்றும் மகளிர் இல்லப் பிள்ளைகளின் நிகழ்வுகளிலும் முன்னின்று பயிற்சி அளித்து உதவும் அருட்சகோதரி ஜதீஸ்வரி அம்மையார்

★ காலமும் நேரமும் அறிந்து செய்திகளை இந்நாட்டுச் செய்தி இதழ்களாகிய உதயன், வலம்புரி மற்றும் தினக்குரல், தினகரன், வீரகேசரி ஆகிய தினசரிகளிலும் பிரசுரித்து உதவும் பத்திரிகைத் துறையினர்

★ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர், இலங்கை வானொலி யாழ். சேவையினர்

★ ஆங்கில பாட போதனையை நல்லபடி கற்பித்து வரும் திரு. சி. அருளானந்தசிவம் அவர்கள்

★ நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபப் பணியாளர்கள், இங்கு நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு நற்பணியாற்றிவரும் திரு. நா. தவமணிநாயகம் அவர்கள்

★ நீர்மின் இணைப்பு வேலைகளை செய்துதவும் திரு. த. தயானந்தன் அவர்கள்

★ எங்கள் நிர்வாகசபை கொழும்புப் பிரதிநிதி திரு. சி. புஸ்பநாதன் அவர்கள் இல்ல வளர்ச்சிக்கு ஆற்றி வரும் உதவிகள்

★ கடிதத் தொடர்புகள், அச்சகப் பணிகளை ஒப்பு நோக்கல், வங்கி வைப்புக்கள் அன்பளிப்புக்களை பற்றுச் சீட்டுக்கள் பதித்தல், அனுப்புதல் ஆகிய பணிகளைச் செம்மையாக நிறைவேற்றித் தரும் அலுவலர் திரு. கா. சிவபாலன் அவர்கள்

★ மகளிர் இல்ல அச்சுப் பணிகளை நல்லபடி நிறை வேற்றித் தரும் திருமகள் அழுத்தகத்தினர் ஆகியோ ருக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பரமர்க் கங்காமே"

என்பதை நினைவிலிருத்தி மக்கள் பணியை மகேசன் பணியாக நினைத்து ஆவன செய்வோமாக.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.**
தலைவர்

**கே. புஸ்பலட்சுமி**
உயர்தர வகுப்பு மாணவி

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.
03 - 02 - 2001

# இல்லக்கீதம்

## பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று — வாழிய

## அநுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணிதெல்லி யூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் — வாழிய

## சரணம்

ஒழுக்கம் உயர்பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும்என்ற மேலோர்கள் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற — வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக் கூடக் கல்வி யோகசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டுமிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும்—வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவர்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க — வாழிய.

# இல்லப் பணியாளர் விபரம்

திரு. கா. சிவபாலன் — *பிரதம லிகிதர்*
செல்வி த. மஞ்சுளா — *உதவி லிகிதர்*
செல்வி ச. ரேவதி — *உதவி லிகிதர்*
செல்வி க. காமாட்சி
செல்வி பெ. செல்வராணி
செல்வி எஸ். மீனா
செல்வி சு. சுகந்தினி
திரு. செ. வல்லிபுரம்
திரு. வே. பாக்கியமுத்து

வங்கிகள் :

1. இலங்கை வங்கி, சுன்னாகம் — 4923
2. இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் — 12977
3. இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி — 0037-01-0004020-4

உள்துறைக் கணக்காய்வாளர் :

திரு. எ. சின்னத்தம்பி — *(கூட்டுறவுப் பரிசோதகர்)*

பட்டயக் கணக்காய்வாளர் :

செல்வேந்திரா அன். கோ. யாழ்ப்பாணம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.